# பழகக் கற்றுக்கொள் பாப்பா!

பழகக் கற்றுக்கொள் பாப்பா _ நல்
பழக்கங்களை பழகக் கற்றுக்கொள்
பண்பும் பணிவும் கற்றுக்கொள்
அன்பும் அருளும் பெற்றுக்கொள்
பொறாமை கோபம் கடுஞ்சொல்லைக்
கட்டிக் கடலில் போட்டு விடு
எண்ணி முடிவெடு பாப்பா _ நல்
ஏற்றம் பெறுவாய் வாழ்வில்!

<u>பயிற்சிகள்</u> :

**அ. சேர்த்து எழுது**

பழக + கற்றுக்கொள் ______________________

கடும் + சொல் ______________________

**ஆ. எதிர்ச்சொல்**

நல்ல x ______________________

ஏற்றம் x ______________________

**இ. இப்பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் வந்துள்ள சொற்களை எழுது.**

**சான்று:**

1. **ப**ணிவு, **2. ப**ழக்கங்கள், 3. __________________ 4. __________________

5. __________________ 6. __________________

**ஈ. விடை எழுது.**

1. எவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும்?

2. எந்தெந்த குணங்களைக் கடலில் போட வேண்டும்?

**உ. திறனறிதல்:**

**உன்னிடம் உள்ள நற்பண்புகளை பட்டியலிடு.**

1. நான் பொய் பேசமாட்டேன்.
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________